# கவிதைகள்

## 1.பள்ளி

பால்மணம் மாறாப் பாலர்க்கு
பால்குடி மறக்கவோ பாலர்பள்ளி
பிஞ்சுவயதில் பஞ்சுப்பொதி சுமக்க
அஞ்சு வயதிலோர் ஆரம்பப்பள்ளி
கூடிவிளை யாடுவோம் கூடவே
நாடு வோமே நடுநிலைப்பள்ளி
வீழ்ச்சியும் தாழ்ச்சியும் போக்கி
வாழ்க்கை உயரவே உயர்நிலைப்பள்ளி
மண்ணில் பிறந்தநாம் விண்ணிலேறி
வானில் பறக்கவே மேனிலைப்பள்ளி
படித்து நாமுயர பள்ளியீந்த
படிக்காமேதையைப் புகழ்வோம் பலசொல்லி

> அன்ன சத்திரம் ஆயிரம் கட்டல்
> ஆலயம் பதினாயிரம் நாட்டல்
> அன்ன யாவினும் புண்ணியங்கோடி
> ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்
> \- பாரதியார்

## 2.முயற்சி

முயற்சியில் எழுவது பயிற்சி
பயிற்சியில் வருவது அயர்ச்சி
அயர்ச்சியைத் தவிர்த்தால் எழுச்சி
எழுச்சியில் விளைவது உயற்சி
உயற்சியின் எல்லை புகழ்ச்சி
புகழ்ச்சியில் தலைக்கணம் வீழ்ச்சி
வீழ்ச்சியில் உறுவது இகழ்ச்சி
இகழ்ச்சியைக் களைவது மறுமுயற்சியே

> தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
> மெய்வருத்தக் கூலி தரும்
> \- திருவள்ளுவர்

## 3.தாய்

சித்திரமாய் நானெழக் கருவறையில் சுமந்தாய்
பத்துமாதம் ஆனவுடன் பத்திரமாய்ப் பிரித்தாய்
பிறந்தவுடன் நானழப் பார்த்துநீயும் சிரித்தாய்
பிறநாளில் நான்சிரிக்க நீயதையும் மறந்தாய்
சிறப்புடனே நான்வளர நல்லமுதும் ஈந்தாய்
விருப்புடனே நான்சுவைக்க அடுப்பினிலும் வெந்தாய்
அகரந்தொட நீமுதல் ஆசானாய் இருந்தாய்
சிகரந்தொட சீர்மறு பெற்றோரில் சேர்த்தாய்
மேனிலை தொடநீயும் நல்லேணியாய் அமைந்தாய்
வானில்நானும் பறக்கவேயுன் வாழ்நாளைக் கழித்தாய்

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்
- திருவள்ளுவர்

## 4.தந்தை

பிடித்து நான்விளை யாடவென்
ஓரிரண்டு வயதில்நீ பொம்மையப்பா
ஒளிந்து நான்விளை யாடவென்
மூவிரண்டு வயதில்நீ நண்பனப்பா
படித்து நானுரை யாடவென்
ஐயிரண்டு வயதில்நீ ஐயனப்பா
பண்பில் நானுயர நித்தித்ததாலென்
ஏழிரண்டு வயதில்நீ எதிரியப்பா
அவையில் முந்தியிருப்பச் செய்ததாலென்
ஐயைந்து வயதில்நீ கடவுளப்பா
யாதுமாகி நின்றதால் நீயெனக்கு
பன்முகங் காட்டும் நன்மகனப்பா

தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்
-திருவள்ளுவர்

## 5.இளமை

இளமை என்பதோர் இளந்தளிர் - அஃது
இயற்கை யன்னையின் பைந்தளிர்
காப்பு தரும் நல்லுயர்வு
தவிர்ப்பு தரும் வெகுதாழ்வு
இளமையில்கல் - கடக்கலாம் பலமைல்கள்
இளமையில் கல்லான் வெறும் மைல்கல்
இளமைத்தேனீ முதுமையிலும் இளமை
இளமைச் சோம்பல் இளமையிலே முதுமை
இளமையொரு காட்டாற்று வெள்ளம்
அணையிட்டால் வாழ்வு சோலைவனம்
அன்றில் அதுவெறும் பாலைவனம்
வரப்புயர வாழ்மன்ன! - அன்று
பண்புயர வாழ்இளமே! - இன்று

| |
|---|
| களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே<br>- புறநானூறு |

## 6.சிந்தனை

சிந்தனை யுள்ளவன் மனிதன் - நற்
சிந்தனை யற்றவன் மிருகம்
சிந்தித்ததால் பானைக்கொரு சோறுபதம்
சிந்தித்தால் பயிற்சிக்கொரு கணக்குஇதம்
சிந்தனை சீர்குலையும் வண்ணக்காட்சியில்
சிந்தனை சீர்மிகும் எண்ணக்காட்சியில்
நிந்தனை செய்வோம் எதிர்மறையை
வந்தனை செய்வோம் நற்சிந்தனையை

| |
|---|
| வளமிகு பயிர் - ஏர்முனையில்<br>சீர்மிகு சிந்தனை - கூர்முனையில் |

## 7.கார்மேகம்

கார்மேகமே உன்னிறமோ கருப்பு
தார்நிலமோ உந்தன் விருப்பு
வார்கடலே உந்தன் பிறப்பு
பார்நிலமே உந்தன் உமிழ்ப்பு
மழை பொழிவதுந்தன் பொறுப்பு – அதில்
தழைப்பதெம் வாழ்வின் உயிர்ப்பு
மாதம் மும்மாரி தீதின்றி தந்தாலுன்
பாதம் பற்றி வணங்குவம் யாமே

பார் நிலத்தில் மரம் நடுவீர்
கார் மேகத்தில் மழை பெறுவீர்

## 8.மலை

குமரக் கடவுள் ஆள்வதும் மலையே
குறவர் கூட்டம் வாழ்வதும் மலையே
கிழங்கும் தேனும் கிடைப்பதும் மலையே – அதை
விலங்குகள் உண்டு மகிழ்வதும் மலையே
முகில்கள் பஞ்சாய்த் தவழ்வதும் மலையே
மகிழ்வில் மழையைத் தருவதும் மலையே
சூறைக் காற்றைத் தடுப்பதும் மலையே
ஈரக் காற்றைக் கொடுப்பதும் மலையே
மருந்தை உடலுக்கு அளிப்பதும் மலையே
விருந்தாய் கண்ணுக்கு இருப்பதும் மலையே

காப்போம் மலைவளம்
பெறுவோம் மழைவளம்

## 9.மழை

தமிழில் மழை என்பது நிரையசை
மழையில் துளி என்பதும் நிரையசை
துளியில் நதி என்பது நிரையசை
நதியில் அணை என்பதும் நிரையசை
அணையில் வளம் என்பது நிரையசை
வளத்தில் நலம் என்பதும் நிரையசை
நலத்தில் அறம் என்பது நிரையசை
அறத்தில் இறை என்பதும் நிரையசையே

இன்றைய மழையின் சேமிப்பு
நாளைய மழலையின் பாதுகாப்பு

## 10.குழந்தை

பொக்கைச் சிரிப்பில் பூக்கள் தோன்றும்
குதலை மொழியில் குழலும் தோற்கும்
அளைந்த கூழோ அமிழ்தினும் இனிக்கும்
தளர்ந்த நடையில் தங்கரதம் தோன்றும்
குன்றெனச் செல்வம் கொட்டிக் கிடப்பினும்
குழந்தைச் செல்வமே உயர்ந்து நிற்கும்
உழைப்பில் தோன்றும் அலுப்புகள் எல்லாம்
உன்னைக் கண்டால் ஓடிப் போகும்

குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்
-திருவள்ளுவர்

# 11.நட்பு

அன்பைத் தருவது ஆன்றோர் நட்பு
பண்பைத் தருவது சான்றோர் நட்பு
ஆராய்ந்து பார்த்தால் இனிப்பது நட்பு
சீராய்ந்து சேர்த்தால் சிறப்பது நட்பு
பாடித் திரிவதில் இல்லை நட்பு
கூடிப் பிரிவதில் தெரிவது நட்பு
படிந்து நடப்பதில் இல்லை நட்பு
கடிந்து திருத்துதல் உண்மை நட்பு
முப்பாலில் உள்ள வள்ளுவ நட்பு
எப்போதும் மாறா நல்லக நட்பு

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு
-திருவள்ளுவர்

# 12.இயற்கை

ஒலியெனும் அசுரனை ஒழித்து
வெடியெனும் அரக்கனை வெறுத்து
மாசற்ற தேவனை வாழ்த்தி
அன்னையெனும் பூமிதனை மதித்து
தந்தையெனும் மரந்தனை வளர்த்து
பொக்கையெனும் மொட்டுதனை போற்றி
குழந்தையெனும் பூக்களைச் சாற்றி
இயல்பெனும் வாழ்க்கை வாழ்ந்தால்
சீற்றமெனும் காய்தனை மறைத்து
ஏற்றமெனும் கனியளிப்பாள் இயற்கை

இயல்பாய் வாழ்வோம்
இயற்கையைப் போற்றுவோம்

## 13.வானம்

கானம் செழித்திடல் வேண்டும்

பானம் பருகிடல் வேண்டும்

மானம் காத்திடல் வேண்டும்

தானம் தந்திடல் வேண்டும்

ஊனம் ஒழிந்திடல் வேண்டும்

ஞானம் பெருகிடல் வேண்டும்

ஆனதனைத்தும் தழைத்திட ஈடில்

வானமேயெம் பூமிபார்த்திடல் வேண்டும்

தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்
-திருவள்ளுவர்

## 14.கடல்

அழகா யிருப்பதும் கடலே

ஆழமா யிருப்பதும் கடலே

உப்பா யிருப்பதும் கடலே

உணவை யளிப்பதும் கடலே

பலமா யிருப்பதும் கடலே

பாலமா யிருப்பதும் கடலே

சீலமா யிருப்பதும் கடலே

சீற்றமா யிருப்பதும் கடலே

பொறுமையா யிருப்பதும் கடலே

பொங்கி யெழுவதும் கடலே

பொறுமை கடலினும் பெரிது
-பழமொழி

## 15.கல்வி

அன்பைக் கொடுப்பதும் கல்வியே
பண்பை வளர்ப்பதும் கல்வியே
அறிவைத் தருவதும் கல்வியே
செறிவை நிறைப்பதும் கல்வியே
அற்றம் காப்பதும் கல்வியே
சுற்றம் சேர்ப்பதும் கல்வியே
ஆற்றுணா அளிப்பதும் கல்வியே
நாற்றிசை புகழ்வதும் கல்வியே
எளிதாய் விளங்கும் கல்வியை
இளமையில் விரும்பிக் கற்றிடு
வானமாய் விரிந்த கல்வியை
பானமாய் விரைந்து கற்றிடு
தானமாய் பெற்ற கல்வியை
தரணியில் பலருக் களித்திடு

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை
-திருவள்ளுவர்

**கோ. கண்ணன் , பி. இ ,**
**1. மூன்றாவது தெரு,**
**வ. உ. சி. நகர்,**
**போடிநாயக்கனுர் - 625513.**
**அலைபேசி** : *7010157864*